SW

அடையாள இலக்கம்

| | | | | |
|---|---|---|---|---|
| C | | | | |

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2025

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

# மேற் பிரிவு

# SW

(10 – 11 வயதுப் பிரிவு)

நேரம்: 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

- BLANK PAGE -

**(அ) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. கைவிரல் : ______________ + ______________
2. மீன்முள் : ______________ + ______________
3. நிலவொளி : ______________ + ______________
4. ஐந்தாண்டு : ______________ + ______________
5. விரைந்தோடினான்: ______________ + ______________

(5 புள்ளிகள்) [ ]

**(ஆ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

1. பாட்டு + பாடினாள் : ______________________
2. வயிறு + நோய் : ______________________
3. கால் + சட்டை : ______________________
4. கார்த்திகை + மாதம் : ______________________
5. பொன் + காப்பு : ______________________

(5 புள்ளிகள்) [ ]

**(இ) பின்வரும் சொற்களுக்கு எதிர்ப் பொருள் கொண்ட சொற்களை எழுதுக.**

1. இன்பம் : ________________
2. குழப்பம் : ________________
3. குறை : ________________
4. நீதி : ________________
5. மறதி : ________________

(5 புள்ளிகள்) [ ]

**(ஈ) பின்வரும் சொற்களின் உயர்திணைப் பெண்பாற் சொற்களை எழுதுக.**

1. தாத்தா : ____________________
2. சிநேகிதன் : ____________________
3. மணமகன் : ____________________
4. நடிகன் : ____________________
5. தலைவன் : ____________________

(5 புள்ளிகள்) [ ]

**(உ) அடைப்புக் குறிக்குள் இருந்து பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்துக் கீழே தரப்பட்ட வசனங்களிற் காணப்படும் கோடிட்ட இடங்களில் எழுதி நிரப்புக.**

1. ஏழைகளுக்கு மனம் ________________ (இறங்கி, இரங்கி) உதவவேண்டும்.

2. வாழைப்பழத்தை ________________ (உரித்து, உறித்து) சாப்பிடு.

3. குப்பைகளைக் கண்ட இடங்களில் ________________ (எறியாதே, எரியாதே).

4. சிறுவன் அங்கும் இங்கும் ஓடியதால் ________________ (களைத்து, கழைத்து) விட்டான்.

5. கூடையில் ________________ (பலங்கள், பழங்கள்) நிறைந்துள்ளன.

6. இரவிவர்மா ஓவியக் ________________ (கலையில், கழையில்) சிறந்து விளங்கினார்.

7. முத்து மருத்துவமனையில் ______________ (பனி, பணி) புரிகிறார்.

8. சேயோன் தனது வயதான பெற்றோர்களைப் ________________ (பேணி, பேனி) காத்தான்.

9. குமரன் ஓவியத்திற்கு __________________ (வண்ணம், வன்னம்) தீட்டினான்.

10. பள்ளிச் சுற்றுலாவிற்கு ________________ (என்பது, எண்பது) பேர் சென்றனர்.

(10 புள்ளிகள்)

**(ஊ) கீழே தரப்பட்ட சொற்களுக்கு அவற்றின் பொருள் விளங்கும்படி ஐந்து (5) சொற்களுக்குக் குறையாது வாக்கியங்கள் எழுதுக.**

1. கப்பல் :______________________________

______________________________

2. நாடகம் :______________________________

______________________________

3. ஔவையார் :______________________________

______________________________

4. திரைப்படம் :______________________________

______________________________

5. கதைப்புத்தகம் :______________________________

______________________________

6. தைப்பொங்கல் :______________________________

______________________________

7. பாரம்பரிய உணவு:______________________________

______________________________

8. பள்ளிவிடுமுறை :______________________________

______________________________

9. பரதநாட்டியம் :______________________________

______________________________

10. விமானநிலையம்:______________________________

______________________________

(20 புள்ளிகள்)

\-    BLANK PAGE  -

**(எ) கீழே தரப்பட்ட உதவிச் சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களை வைத்து பந்தியில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.**

குழந்தைகளுக்கு எழுதப்படும் ஒருவகைக் கதை விலங்குக்கதை ஆகும். பொதுவாகவே, விலங்குக்கதைகள் பெரியவர்கள், சிறியவர்கள் என இரு (1)____________________ மகிழ்விக்கக் கூடியவை. குழந்தைகளுக்கென்று எழுதப்பட்ட விலங்குக்கதைகள் வளர்ந்த மனிதர்களின் உள்ளே (2)____________________ கிடக்கும் குழந்தை மனத்தைச் சென்று தொடும் ஆற்றல் பெற்றவை. அதுபோலப் பெரியவர்களுக்கென்று (3)____________________ விலங்குக்கதைகள் குழந்தைகளின் உள்ளே இருக்கும் பெரிய மனித இயல்பைத் தூண்டும் ஆற்றல் பெற்றவை.

மனிதர்களைப் போலவே விலங்குகளுக்கும் உணர்ச்சிகள் (4)____________________. அன்பு, ஆத்திரம், கவலை, சினம் முதலிய (5)____________________ அவையும் ஆளாகின்றன. அவை மனிதர்களிடத்தில் பேரன்பு (6)____________________. மனிதன் காட்டுகின்ற அன்பிலாவது ஓரளவு சுயநலம் உண்டு. (7)____________________ காட்டும் அன்பில் அதற்கு இடமில்லை. பழக்கப்பட்டுவிட்ட நாய், பூனை, ஆடு, கன்றுக்குட்டி, குதிரை போன்ற வீட்டு (8)____________________ குழந்தைகள் பெரிதும் நேசிக்கின்றனர். விலங்குகளிடம் காணப்படும் குறும்பு, கோபம், கருணை, வேற்றுமை உணர்வு முதலிய பண்புகள், குழந்தைகளை (9)____________________ அவற்றின்மீது ஈடுபாடு கொள்ளத் தூண்டுகின்றன. இவ்விலங்குகளைப் பாத்திரமாக வைத்து எழுதப்படும் (10)____________________ எல்லாம் குழந்தைகளாலும் வரவேற்கப்படுவது உறுதி. ஆகவே, வெளிநாட்டவரால் எழுதப்படும் கதைகளை மட்டும் நம்பி இல்லாமல் நம் நாட்டுச் சூழலுக்கு ஏற்ற கதைகளை நம்நாட்டு எழுத்தாளர்களே எழுத வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| மிருகங்களை | விலங்குகள் | கதைகள் | உண்டு |
| பிரிவினரையும் | மறைந்து | கவர்ந்து | |
| உணர்ச்சிகளுக்கு | காட்டுகின்றன | எழுதப்பட்ட | |

(15 புள்ளிகள்)

(ஏ) **கீழே தரப்பட்ட கவிதையைப் படித்த பின்னர் அதன் கீழேயுள்ள கேள்விகளுக்குத் தகுந்த விடைகளை எழுதுக.**

## முப்பெரும் புலவர்

அருமை மிக்க உண்மைகளை
அழகாய் உணர்த்தும் தனிநூலாம்
திருக்குறள் தந்த பேரறிஞர்
தெய்வப் புலமை வள்ளுவராம்

இந்தியர் போற்றும் இதிகாசம்
இராமாயணம் அதைச் சுவையுடனே
செந்தமிழ் மொழியில் நமக்காகத்
தந்தவர் கம்பர் கவிமன்னர்

கற்பின் பெருமை உலகறியக்
காட்டும் சிலப்பதிகாரம் எனும்
அற்புதமான காவியத்தை
அளித்தவர் அடிகள் இளங்கோவாம்

இப்பெரும் புலவர் மூவரையும்
என்றும் போற்றிப் புகழ்ந்திடுவோம்
முப்பெரும் நூலாம் இவைகளையே
முறையாய்க் கற்றுப்பயன் அடைவோம்

அழ வள்ளியப்பா பாடல்

**கேள்விகள்:**

1. இப்பாடலிற் கூறப்படும் முப்பெரும் புலவர்கள் யாவர்? (3 புள்ளிகள்)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

2. திருக்குறள் உமக்கு எதை உணர்த்துகின்றது என்று கண்டீர்? (2 புள்ளிகள்)

_______________________________________________

_______________________________________________

3. இப்பாடலில் சொல்லப்பட்ட இந்தியர் போற்றும் இதிகாசம் எது? அதைத் தமிழில் தந்தவர் யார்? (3 புள்ளிகள்)

_______________________________________________

_______________________________________________

4. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது, அது எது? அதை எழுதியவர் யார் என அறிந்தீர்? (3 புள்ளிகள்)

________________________________________

________________________________________

5. பாடலின் இறுதிப்பகுதியில் கூறப்பட்டுள்ள அறிவுரைகள் எவை? (4 புள்ளிகள்)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

(15 புள்ளிகள்) [ ]

**(ஐ) கீழே தரப்பட்ட தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக.**

1. உடல்நலம் பேணவேண்டியதன் அவசியமும், அதற்கான வழிகளும்.

2. அண்மையில் நீர் உமது வகுப்பு மாணவர்களோடு மேற்கொண்ட ஒரு கல்விச்சுற்றுலா.

(20 புள்ளிகள்)